<u>வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்</u>
ஒ.மு.எண். 4563/அ3/2025 நாள். 11.09.2025

பொருள்: கற்றல் கற்பித்தல் பயிற்சி – வேலூர் மாவட்டம் – 2025–2026ஆம் கல்வி ஆண்டில் பி.எட்., பயிலும் மாணவ/ மாணவிகளுக்கு கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள அனுமதி அளித்தல் – தொடர்பாக.

பார்வை: வேலூர், அரசு கல்வியியல் கல்லூரி முதல்வரின் கடிதம், ந.க.எண்.468/அ1/2025 நாள்.10.09.2025.

---

2025–2026ஆம் கல்வியாண்டில் பி.எட். பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு, வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/நகரவை/அரசு உதவி பெறும் மற்றும் ஆதிதிராவிடர் நல உயர் மற்றும் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் பயிற்சியை மேற்கொள்ள அனுமதி வழங்க கோரி பார்வையில் காணும் சார்ந்த கல்லூரி முதல்வரின் கடிதம் பெறப்பட்டது. இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மாணாக்கர்கள் 12.09.2025 முதல் 80 வேலை நாட்கள் (16 வாரங்கள்) பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள கீழ்காணும் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. கற்றல், கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளும் பள்ளியில் எவ்வித புகாருக்கும் இடமளிக்கா வண்ணம் பயிற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. இப்பயிற்சி மேற்கொள்ளும்போது புகார்கள் ஏதும் பெறப்பட்டால் எவ்வித தகவலுமின்றி இவ்வாணை இரத்து செய்யப்படும்.
3. மேலும் பயிற்சி பெறும் ஆசிரியர்கள் சார்பான விவரங்களை பள்ளியில் தவறாமல் பராமரிக்கவும், பதிவேடுகளை ஆய்வின்போது உட்படுத்தவும் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – பயிற்சி ஆசிரியர்கள் மற்றும்
பள்ளிகளின் விவரம்

11/09/2025

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர்
சார்ந்த அரசு / அரசு உதவி பெறும் / நகரவை
உயர் / மேல்நிலைப்பள்ளி, தலைமையாசிரியர்கள்

நகல்
முதல்வர்,
அரசு கல்வியியல் கல்லூரி,
வேலூர்.